# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம்
## (கூட்டிணைத்தல்)

**சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மொனராகலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆனந்த குமாரசிறி அவர்களால் 2016, ஓகத்து மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, யூலை மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *132 ஆம் சட்டமூலம்* ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 010151-225 (2016/08)

## சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்)

## சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம்” என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப்பி னர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல் லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களை யும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட் டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் மக்களின் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைக்கப் படும் மன்றத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட் களும் (இதனகத்துப் பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம்”

என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். என்பதோடு, பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

(2) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனமானது வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலுக்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான நோக்கங்கள்.

3. (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) சத்திய ஸ்ரீ காடுறு கணபதி கோவில் மற்றும் அது அமைந்துள்ள புனித பூமியை மீள் சீரமைத்தல் ;

(ஆ) தேவாலய வழிபாட்டுக் கிரியைகளை மேற்கொள்வதற்காக பீடத்துடனான மண்டபமொன்றை அமைத்தல் ;

(இ) பக்தர்களுக்கு இலவசமாக தங்குமிட வசதிகளை வழங்கும் பொருட்டு தங்குநர் மண்டபமொன்றை நிறுவி வேண்டிய அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்தல் ;

(ஈ) உதவியின்றி வாடும் குறைந்த வருமானத்தில் வாழும் வீடற்ற குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குதலும், சுய தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துதலும் ;

(உ) குறைந்த வசதிகளுடன் இயங்கும் பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளுக்கு பொருள் ரீதியாகவும் பண ரீதியாகவும் உதவி வழங்குதல் ;

(ஊ) தொழில்வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு ஆலயத்தின் அனுசரணையுடன் தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடச் செய்தல்.

*மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தின் பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப் படுத்தல்.*

**4.** கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும் நிருவாகமும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான பதவி தாங்குநர்களின் அத்தகைய எண்ணிக்கையினரைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைச் சபையினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையானது 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டுத்தாபனத்தின் சபையாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையானது இச்சட்டம் தொடங்குகின்ற திகதியிலிருந்து ஓர் ஆண்டிற்குள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போசகர்களும் மதியுரைநர்களும் உட்பட, சபையின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படு

தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போசகர் அல்லது மதியுரைநர், சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீள நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவி விலகுதல், உடற்தகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில் கூட்டுத்தாபனமானது அதன் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் பின்னுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும் புரியவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் வாடகைக்குக் கொடுக்கவும், நிர்மாணிக்கவும் புனரமைக்கவும் அத்துடன் வேறு வகையில் பெறவும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அதனைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும் ;

(ஆ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப் பின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக்கொள்ளுதல் :

ஆயின், சபையானது, கூட்டுத்தாபனத்துக்குச் செய்யப் பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக் களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக் கொள்ளல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், செயற் படுத்தல், பேணுதலும் மற்றும் மூடிவிடுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபை தீர்மானிக் கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும் ;

(உ) ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறை வேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் மற்றும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கு அமர்த்துதலும், பதவி நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும் அத்துடன் அவர்கள்

மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகித்தலும் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்குபடுத்துதல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினரைப் பயிற்சியளித்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டமொன்றில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், அவர்கள் விலகுதலும் அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவி நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும் ;

(ஆ) சபையின் பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும் ;

(ஈ) சபையினது அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் அதனை நடாத்துதலிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தலும் நிகழ்ச்சி நிரலும் அதற்கான கூட்டநடப்பெண்ணும் அத்துடன் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக இருப்பதற்கான தகைமைகளும், தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிருவாகமும் முகாமையும்; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் அரசாங்க வர்த்த மானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

உறுப்பினர் களின் பதிவேடு.

**8**. சபையானது எந்த உறுப்பினர்களின் பதிவேடொன்றில் அவர்களின் பெயர், முகவரி, வேறு முக்கியமான விபரங்கள் என்பன பொறித்திருக்குமோ அந்த உறுப்பினர்களின் பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் நிதியம்.

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்திற்காகவும் அது தொடர்பாகவும் கொடை, மரணச் சாசனக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவிற்கு வைப்புச் செய்யப் படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களையும் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் எல்லாம் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**10**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம், அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி, கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமை யதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற ஒருவரால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமை பெற்ற கணக் காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத் தின் உறுப்பினராக இருப்பதோடு கணக்காய்வாளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத் தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கை பட்டயக் கணக்காளர் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்த கைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ, அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை.

**11.** (1) சபையானது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் கூட்டுத் தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித் தல் வேண்டுமென்பதுடன், புத்த சாசனம் மற்றும் சமய அலுவல் கள் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை (பதிவு செய்தலும் மேற்பார்வை செய் தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை

ஒழுங்கமைப்புக்கள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்புடையதோ அந்த ஆண்டை அடுத்துறுகின்ற ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர், கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாக தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற்பாலதானதும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.*

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**13.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அதனை விற்கவும், ஈடுவைக்கவும், குத்தகைக்குவிடவும், கொடுத்து மாற்றவும் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவும் உள்ள தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனங்கள்.*

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்துதல் வேண்டு

மென்பதுடன், அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**15.** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அத்துடன் அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக அத்தகைய கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது அத்தகைய சபையினால் முடிவு செய்யப்படக்கூடியவாறான சபையின் பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**16.** (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது, அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உபபிரிவின் நோக்கங்களுக்காக, தோதான நிறுவனமானது, பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் கலைப்பதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*